[3rd November 1966

திரு. எஸ். ஜே. ராமசாமி : கைது செய்யப்பட்டவர்களின் பெயர்களைச் சொல்ல அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள். எந்த ஊரில் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை யாவது அறிவிப்பார்களா?

MR. SPEAKER : Will the Hon. Minister kindly say whether the names of those persons are available with him now?

கனம் திரு. பூ. கக்கன் : பெயர்களைச் சொல்வதில் ஆட்சேபணை இல்லை. அதனால் சில பேர்கள் இவர்கள் அகப்பட்டுக்கொண்டதால் தப்பித்துக் கொள்வார்கள். மேலும், இது இன்வெஸ்டிகேஷனில் இருப்பதால் சொல்லாமல் இருக்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

கனம் சபாநாயகர் : பப்ளிக்காக ஒருவரை அரெஸ்ட் செய்து கோர்ட்டுக்கு ரிமாண்டுக்கு வந்தால் எல்லோருக்கும் தெரியும், அந்தத் தகவலை ஏன் சொல்லக் கூடாது என்று கேட்கிறார்கள். அதற்கு ஏதாவது சொல்கிறீர்களா?

கனம் திரு. பூ. கக்கன் : இவர்கள் பெயர்களைச் சொல்லிவிட்டால் இவர்களோடு சேர்ந்திருப்பவர்கள் சிலர் மறைந்து விடுவார்கள் என்பதற்காகத்தான் சொல்லவில்லை.

திரு. சா. கணேசன் : பெயர்கள் பத்திரிகையில் வந்தாகிவிட்டது.

கனம் சபாநாயகர் : அப்படிப் பத்திரிகையில் வந்திருந்தால் ஏன் கேட்கிறீர்கள்?

திரு. சா. கணேசன் : பலர் பார்க்காமல் இருக்கலாம். அதை இனிமேலும் சட்ட சபையில் ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமா என்று கேட்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பத்திரிகையில் வந்திருக்கிறது என்றால் என்ன வந்திருக்கிறது என்று கேட்டால், வேண்டுமானால் பார்த்துச் சொல்லலாம். என்னென்ன தகவல்கள் கொடுப்பது, என்னென்ன கொடுப்பதில்லை என்ற ஒரு முறை இருக்கிறது. பரிசீலனையில் இருக்கும்போது சில தகவல்களைக் கொடுத்தால் அது பாதிக்கப்படும் என்ற வகையில் பெயர்களைச் சொல்ல மறுக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை.

கூட்டுறவு பாங்கு கட்டடங்கள்

***374 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்** : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை State Co-operative Bank -ல் இருந்து ரூ. 40 லட்சம் செலவிட்டு புதிய கட்டடம் ஒன்று கட்டவேண்டும் என்று கோரி அரசுக்கு விண்ணப்பம் அண்மையில் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

3rd November 1966]

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (அ) Yes.

(இ) The Madras State Co-operative Bank has been advised to defer the proposal of constructing a new building for the duration of the National Emergency.

*375 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு பாங்கு அலுவலகத்திற்காகவும், மத்திய கூட்டுறவு பண்டகசாலையின் உபயோகத்திற்காகவும் கட்டடமும் "யாஸ்மின் ரைஸ் மில்லும்" வாங்க அரசாங்கத்தின் அனுமதி கோரப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: புதுக்கோட்டை கூட்டுறவு மத்திய பாங்கு ஒரு கட்டடம் வாங்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் அனுமதி கோரியது. இந்த அனுமதி வழங்கப்பட்டது. புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஓர் அரிசி மில் வாங்கிய பிறகு, மாநில அரசின் உதவி வேண்டி மனுச் செய்தது. இச் சங்கம் இந்த மில் வாங்குவதற்கு முன் அனுமதியைப் பெறவில்லையாதலால் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் இம் மனுவை நிராகரித்துவிட்டார்.

திரு. பி. முருகையன்: இந்த இரண்டு கட்டடங்களும் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: இந்தக் கட்டடம் கட்ட 25—6—1963-ல் பெர்மிஷன் கொடுத்திருக்கிறார்கள் ரெஜிஸ்டிரார் அவர்கள். இந்தக் கட்டடம் கட்டுவதற்காகத்தான் பெர்மிஷன். அந்த மில் கட்டுவதற்கு பெர்மிஷன் கேட்கவில்லை.

திரு. சா. கணேசன்: இந்த ரைஸ்மில் விலைக்கு வாங்கியது அது கட்டியது அல்ல என்று தெரிகிறது; அப்படித்தானா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: வாங்குவதற்குத்தான் பெர்மிஷன்.

திரு. பி. முருகையன்: நான் கேட்ட கேள்வி, இரண்டு கட்டடங்களும் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டன என்பது. அதற்கு பதில் சொல்லவில்லை. தொகை எவ்வளவு?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ரூ. 1,17,000 என்று அவர்கள் கேட்டார்கள். ரூ. 1,04,000-க்குத்தான் வாங்கியிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: வாங்கப்பட்ட கட்டடத்தின் மதிப்பு ரூ. 1,04,000 என்று சொன்னார்கள். இதற்கு யார் பொறுப்பு? யாரால் இவ்வளவு ரூபாய்க்கு வாங்கவேண்டுமென்ற ஸஜெஷன் கொடுக்கப்பட்டது? அதன் பேரில் பரிசீலனை செய்யப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அந்தத் தகவல் என்னிடம் இல்லை.